# தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பாடசாலைகள் (selective high schools) மற்றும் வாய்ப்பு வகுப்புகளுக்கான (opportunity classes) வழிகாட்டி

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பாடசாலைகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகள் **உயர் திறன் மற்றும் திறமையான மாணவர்களை** ஒன்றிணைக்கும் சிறப்புப் பள்ளி அமைப்புகளாகும்.

ஒத்த திறன்களைக் கொண்ட வகுப்பு தோழர்களுடன் கற்கும்போது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் உதவுகிறது.

மாணவர்கள் இன்னும் NSW பாடத்திட்டத்தைப் பின்பற்றுகிறார்கள், ஆனால் ஆசிரியர்கள் உயர் திறன் மற்றும் திறமையாக கற்பவர்களுக்கு சிறப்பு கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தலாம்.

## தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பாடசாலைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 4 வகைகள் உள்ளன:

- **முழுமையாக தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்** - இவை நுழைவுத் தேர்வு அடிப்படையில் அனைத்து மாணவர்களையும் தெரிவு செய்யும் பள்ளிகளாகும்.
- **பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்** - இவை தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் உள்ளூர் பகுதி மாணவர்களின் கலவையைக் கொண்ட பள்ளிகளாகும்.
- **வேளாண் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்** - இவை விவசாயப் படிப்பை வலியுறுத்தும் பள்ளிகள் மற்றும் அனைத்து மாணவர்களும் அவர்களின் கல்வித் திறனின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த பள்ளிகளில் சில மாணவர்கள் வசிக்கும் உறைவிடத்தையும் வழங்குகின்றன
- **Aurora College** - இவை இணையம் வழி இயங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்புகள். அவை கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள உள்ளூர் பொது உயர்நிலைப் பள்ளிகளில் வழங்கப்படுகின்றன.

## வாய்ப்பு வகுப்புகள்

வாய்ப்பு வகுப்புகள் என்பது அதிக திறன் மற்றும் திறமையான 5 மற்றும் 6 - ஆம் ஆண்டு மாணவர்களுக்கானது. NSW முழுவதும் உள்ள பல பொது ஆரம்பப் பள்ளிகளில் இவை வழங்கப்படுகின்றன.

Aurora College - கிராமப்புற மற்றும் தொலைதூர மாணவர்களுக்கு அவர்களின் உள்ளூர் ஆரம்பப் பள்ளிகளில் இணையம் வழியாக வாய்ப்பு வகுப்புகளை வழங்குகிறது.

## அவை எங்கே அமைந்துள்ளன?

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகள் பெருநகர, பிராந்திய மற்றும் கிராமப்புற NSW முழுவதும் இயங்குகின்றன. உங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைக்கு கீழே உள்ள வரைபடத்தைப் பார்க்கவும்.

- வாய்ப்பு வகுப்பைக் கண்டறிய
- தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பாடசாலையைக் கண்டறிய


CC BY

## என் பிள்ளைக்கு இது சரியானதா என்பதை நான் எப்படி அறிவது?

உங்கள் பிள்ளை:

- மகிழ்வாக கற்பவர்
- தீவிர ஆர்வம் கொண்டவர்
- நல்ல நினைவாற்றலைக் கொண்டவர்
- சிக்கலான கேள்விகளைக் கேட்பவர்
- புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ளும்போது மறுபடியும் விளங்கப்படுத்துவது குறைவாக தேவைப்படுபவர்
- ஆக்கப்பூர்வமான சிந்தனை வழிகளைக் கொண்டவர்
- ஆர்வமவுள்ள துறை மற்றும் பேரார்வத்தில் தீவிர கவனம் செலுத்துபவர்?

இவற்றில் சில பண்பு உங்கள் பிள்ளைக்கு இருந்தால், வாய்ப்பு வகுப்பு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி நன்றாகப் பொருத்தமாக இருக்கும்.

## நான் எப்படி விண்ணப்பிப்பது?

shsoc.education.nsw.gov.au என்ற இணையத்தளம் வழியாக விண்ணப்பிக்கும் காலத்தில் பெற்றோர் விண்ணப்பிக்கவும்

## 2026 -ஆம் ஆண்டிற்கான வாய்ப்பு வகுப்பு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்கான நுழைவு விபரம்

2026 -ஆம் ஆண்டு நுழைவிற்கான விண்ணப்ப காலம் **7 நவம்பர் 2024** முதல் **21 பிப்ரவரி 2025** வரை ஆகும்.

### நான் விண்ணப்பிக்கும் போது எனது பிள்ளை எந்த ஆண்டில் கற்பவராக இருக்க வேண்டும்?

**வாய்ப்பு வகுப்புகள்**

2024-ஆம் ஆண்டு 3-ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2025-ஆம் ஆண்டு 4-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.

**தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பாடசாலைகள்**

2024-ஆம் ஆண்டு 5-ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2025-ஆம் ஆண்டு 6-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.

வாய்ப்பு வகுப்புகளுக்கு யார் விண்ணப்பிக்கலாம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு யார் விண்ணப்பிக்கலாம் என்பதைப் பற்றிய விண்ணப்ப செயல்முறை மற்றும் வதிவிடத் தேவைகள் பற்றி எங்கள் இணையதளத்தில் மேலும் அறியவும்

## நுழைவுத் தேர்வு

நீங்கள் விண்ணப்பித்த பிறகு, உங்கள் பிள்ளை ஒரு தேர்வில் பங்குபற்ற வேண்டும். அதன்பிறகு, மாணவர்களின் தேர்வுத் திறனின் அடிப்படையில் வகுப்பிற்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

## தேர்வு எப்போது நடைபெறும்?

**மே 2 வெள்ளி** முதல் **மே 4 2025 ஞாயிற்றுக்கிழமை** வரை 3 நாள் கால இடைவெளியில் தேர்வு நடைபெறும்.

மாணவர்கள் ஒரு நாள் மட்டுமே பரீட்சைக்கு வருவார்கள் மற்றும் நுழைவுத் தேர்வில் கலந்துகொள்ள தங்கள் சொந்த கணினியைக் கொண்டு வரத் **தேவையில்லை**.

## தேர்வில் என்ன இருக்கும்?

மாணவர்கள் தாங்கள் கற்பதை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறார்கள், கணிதத்தைப் பயன்படுத்தி பகுத்தறிதல் மற்றும் அவர்களின் சிந்தனைத் திறன் ஆகியவற்றை இந்தத் தேர்வு மதிப்பிடுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கான விண்ணப்பதாரர்கள் அவர்களின் எழுதும் திறன் குறித்தும் சோதிக்கப்படுகிறார்கள்.

மேலும் அறிய: நுழைவுத் தேர்வு.

## எனது பிள்ளையின் தேர்வு முடிவுகளைப் பற்றி நான் எப்போது தெரிந்துகொள்வேன்?

உங்கள் பிள்ளை தேர்வு எழுதிய பிறகு, அவரது சோதனை செயல்திறன் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் பற்றிய மின்னஞ்சலை 3-ஆம் தவணையில் பெறுவீர்கள். உங்கள் பிள்ளைக்கு இடம் வழங்கப்பட்டால், எப்படிப் பதிவு செய்வது என்பது பற்றிய தகவலைப் பெறுவீர்கள்.

## சமவாய்ப்பு இடமளிப்பு மாதிரி

சமவாய்ப்பு இடமளிப்பு மாதிரி அனைத்து மாணவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகளுக்கு நியாயமான அணுகலைப் பெற உதவுகிறது.

இந்த மாதிரியின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி மற்றும் வாய்ப்பு வகுப்பு ஒவ்வொன்றிலும் 20% மாணவர் இடங்கள் பின்வரும் உயர்திறன் மற்றும் திறமையான மாணவர்களுக்காக ஒதுக்கப்படுகிறது:

- குறைந்த சமூக-கல்வி வாய்ப்பு பகுதிகளிலிருந்து வருபவர்கள்
- பூர்வீகக்குடியின மற்றும்/அல்லது டோரஸ் ஸ்ட்ரீட் தீவுகளின் பின்னணி கொண்டவர்கள்
- கிராமப்புற மற்றும் தொலைதூர இடங்களிலிருந்து வருபவர்கள்
- மாற்றுத்திறனாளியாக இருப்பவர்.

நுழைவுத் தேர்வில் மாணவர்களின் செயல்திறன் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட இடங்கள் வழங்கப்படும்.

மேலும் அறிய: நியாயமான அணுகல்.

**அனைத்து NSW அரசுப் பள்ளிகளிலும் திறமையான மாணவர்களை ஆதரித்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகள் NSW கல்வித் துறை உயர் திறன் மற்றும் திறமையான மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வழிகளில் ஒன்றாகும்.

உயர் திறன் மற்றும் திறமையான மாணவர்கள் தங்கள் முழு திறனை அடைய அனைத்து NSW அரசுப் பள்ளிகளிலும் ஆதரிக்கப்படுகிறார்கள். கல்வித் துறையின் உயர் திறன் மற்றும் திறமையான கல்விக் கொள்கை பற்றி மேலும் அறிந்துக் கொள்ளவும்.

## மேலதிக தகவல்களுக்கு

மேலும் விரிவான தகவலுக்கு பின்வரும் இணையப் பக்கங்களைப் பார்க்கவும்.

### பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான வலைப்பக்கங்கள்

- **தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகள்:** education.nsw.gov.au/shs-oc
- **தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்:** education.nsw.gov.au/shs-yr7
- **வாய்ப்பு வகுப்புகள்:** education.nsw.gov.au/oc

### மாணவர்களுக்கான வலைப்பக்கங்கள்

- **மாணவர்களுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் வாய்ப்பு வகுப்புகள் பற்றிய தகவல்:** edu.nsw.link/shs-oc-students
- **வாய்ப்பு வகுப்பிற்கு விண்ணப்பித்தல்:** மாணவர்களுக்கான தகவல் வளம்: edu.nsw.link/OChub
- **தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்கு விண்ணப்பித்தல்:** மாணவர்களுக்கான தகவல் வளம்: edu.nsw.link/SHShub

### சமூக ஊடகங்கள்

எங்களின் அதிகாரப்பூர்வ துறை பேஸ்புக் குழுக்களில் சேரவும்:

- **தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்:** edu.nsw.link/shs-fb
- **வாய்ப்பு வகுப்புகள்:** edu.nsw.link/oc-fb

## தொடர்புக் கொள்ள

தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விப் பிரிவை (Selective Education Unit) பின்வரும் முறைகளில் தொடர்பு கொள்ளவும்

**மின்னஞ்சல்:** ssu@det.nsw.edu.au

**தொலைபேசி:** 1300 880 367

**தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை: 131 450**

உங்களின் வினவல் குறித்து உதவ ஒரு உரைப்பெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையை அழைத்து, தொலைபேசி இயக்குனரிடம் பின்வருபவற்றை கேட்கவும் :

- உங்களுக்கு தேவைப்படும் மொழி
- நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்.

தொலைபேசி இயக்குனர் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வித் துறை தொலைபேசி எண்ணை (1300 880 367) அழைத்து, உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.